JUSTICE MORAL
Newsletter
WWW.JMMEDIA.LK
30 DECEMBER 2025 | EDITION 04

# ஜே.எம் மீடியா கல்லூரியின் ஹெலிகாப்டர் சவாரிக்கான அதிஷ்ட வெற்றியாளர் தெரிவு

மேலும்...

ஜே.எம் மீடியா கல்லூரியில் நடைபெற்று வரும் வெகுஜன ஊடக கற்கை நெறியின் 20 ஆவது குழு மாணவர்களுக்கு ஹெலிகாப்டர் சவாரிக்கான அதிஷ்ட வெற்றியாளர் தெரிவு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.







இந்த தெரிவு டிஜிட்டல் குழுக்கள் முறை மூலம் நடைபெற்று அதிஷ்ட வெற்றியாளராக 20 ஆவது குழுவைச் சேர்ந்த மாணவி நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த சுப்ரமணியம் கனிஷ்கா தெரிவு செய்யப்பட்டார். அதற்கான சீட்டு அதே மேடையில் வைத்து வழங்கப்பட்டது. வெகு விரைவில் அவரது அப்பயணம் நிகழவுள்ளது.

# ஜே.எம் மீடியா நிறுவனத்தின் வெள்ள நிவாரண பணிகள்

ஜே.எம் மீடியா நிறுவனம் மற்றும் BSF இணைந்து நடத்திய வெள்ள நிவாரணப் பணி டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு வெறும் இரண்டே நாட்களில் நடைபெற்று முடிந்தது.

இதில் நாம் முக்கியமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பொருட்களை ஜே.எம் மீடியா தலைமை காரியாலயத்தில் சேகரித்தோம். சிறிய கால எல்லைக்குள் அதிகமானோர் தம்மால் முடியுமான அனைத்து பொருட்களையும் கூறியிருந்த கால பகுதிக்குள் எம்மிடம் ஒப்படைத்தனர்.

டிசம்பர் மாதம் 5ஆம் திகதி அனைத்து பொருட்களும் ஜே.எம் மீடியா நிறுவன ஊழியர்கள், ஜே.எம் மீடியா கல்லூரி மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என்று அனைவராலும் வெவ்வேறாக பிரிக்கப்பட்டு ஒழுங்கான முறையில் பொதி செய்யப்பட்டு பின் டிசம்பர் 6 ஆம் திகதி காலை அனைத்து பொதிகளும் ACJU Kegalle South Division, Relief Work Culture. Kotiyakumbura என்ற இடத்திற்கு எடுத்துச் சென்று அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.



குறிப்பாக இந்த வேலை திட்டத்தில் அனைத்து வேலைப்பளுவிற்கும் மத்தியில் ஜே.எம் மீடியா நிறுவனத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான சட்டமாணி Raashid Malhardeen ஈடுபட்டார்.







இக்குறுகிய கால வேலைத்திட்டத்தில் இணைந்து கொண்ட அனைவருக்கும் ஜே.எம் மீடியா நிறுவனம் நன்றியை தெரிவித்துக் கொண்டதோடு மேலும் எதிர்வரும் காலங்களில் எமது நிறுவனத்தால் JM Cares இன் கீழ் ஏற்பாடு செய்யக்கூடிய அனைத்து சமூக சேவைகளிலும் உங்களுடைய தொடர் பங்களிப்பை வழங்குவீர்கள் என முழுமையாக நம்புகிறோம்.

# கம்பளையில் இயற்கை அனர்த்தத்தினால் 800 கோடி ரூபா வர்த்தக இழப்பு: ஜே.எம் மீடியா தலைவர் நேரில் ஆய்வு.

கம்பளை பிரதேசத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக சுமார் 800 கோடி ரூபா அளவிலான வர்த்தக ரீதியிலான இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பளை பிரதேசத்திற்கு ஜே.எம் மீடியா (JM Media) நிறுவனத்தின் தலைவர் சட்டமாணி ராஷித் மல்ஹார்தீன் (Raashid Malhardeen) உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கள நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்.

இதன்போது, கம்பளை கலாசார மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரதான அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு விஜயம் செய்த அவர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா (ACJU) சபையின் கம்பளைக் கிளைத் தலைவருடன் தற்போதைய நிலவரம் குறித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இக்கலந்துரையாடலின் போது தற்போதய சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் போதுமானளவு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அனர்த்தத்தினால் வாழ்வாதாரத்தை இழந்த வர்த்தகர்களின் வியாபாரங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்குப் பண உதவிகளே தற்போது அவசியத் தேவையாக உள்ளதெனவும், கம்பளைப் பிரதேசத்தில் வர்த்தக துறையில் மாத்திரம் சுமார் 800 கோடி ரூபாவுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

பாதிக்கப்பட்ட வியாபாரிகளை மீட்டெடுப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.







Justice Moral Newslatter

# ஜே.எம் மீடியா தயாரிப்பு நிறுவனத்தின் சேவைகள்

மேலும்...

PRIYNILA முன்பள்ளி மாணவர்களின் புகைப்பட பிடிப்பு

## PRIYNILA முன்பள்ளி மாணவர்களின் தனி மற்றும் குழு புகைப்பட பிடிப்பு

2025 டிசம்பர் 16 ஆம் திகதி Priynila முன்பள்ளி ஆசிரியரின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடைய மாணவர்களின் தனி புகைப்படங்களும் குழு புகைப்படங்களும் ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினரால் அழகான முறையில் எடுத்து அவர்களுக்கு Print செய்தும் கொடுக்கப்பட்டன.

எமது அந்த சேவை குறித்து PRIYNILA முன்பள்ளியின் தலைமை ஆசிரியை மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாக அவர்களின் கருத்துக்கள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தன.

## அனர்த்த உதவிக்குப் பின், Future Voice முதலாவது குழு மீண்டும் ஆரம்பம்

இலங்கை முழுவதையும் பாதித்த அண்மைய அனர்த்தத்தை முன்னிட்டு, "Rebuild Srilanka" என்ற தொனிப்பொருளை மனதில் கொண்டு Future Voice தனது பாடநெறிகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்து, மக்களுக்கு தேவையான தருணத்தில் ஆதரவளித்தது.

## புகைப்படக்கலை மற்றும் வீடியோ கலையின் 13 ஆவது குழுவின் பாடநெறி மீண்டும் ஆரம்பம்.

மாணவர்களின் படைப்பாற்றலுக்கு வித்திடும் JM Media கல்லூரி "Rebuilding Srilanka" முயற்சியில் பங்கேற்று, புகைப்படக்கலை மற்றும் வீடியோ கலையின் 13ஆவது புதிய குழுவின் பாடநெறிகள் மீண்டும் ஆரம்பமானது.

இலங்கை முழுவதையும் பாதித்த அண்மைய அனர்த்தத்திற்கு பிறகு "Rebuild Srilanka" என்ற தேசிய பொறுப்பை உணர்ந்து. ஜே.எம் மீடியா கல்லூரி தங்கள் பாடநெறிகளை தற்காலிகமாக ஒத்திவைத்து, மக்களுக்கு தேவையான தருணத்தில் முழு ஆதரவையும் வழங்கியது.

அந்த பொறுப்புணர்வுடன் எடுத்த முடிவுகளுக்குப் பின்னர், 2025 டிசம்பர் 20ஆம் திகதி, ஜே.எம் மீடியா கல்லூரியின் புகைப்படக்கலை மற்றும் வீடியோ கலை 13ஆவது குழு பயிறசி நெறி மீண்டும் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது.

**SCAN HERE**

அந்த சமூகப் பொறுப்பை நிறைவு செய்த பின், 2025 டிசம்பர் 17ஆம் திகதி Future Voice திட்டத்தின் கீழ் நடத்தப்படும் 4 மாத கால வாழ்வை மாற்றும் கலைப் பாட-நெறி மீண்டும் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது.




